## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 31/2012 | Date : 31.01.2023 | DW2 |
|---|---|---|
| Name: மே.வை.சண்முகராஜா | S/o. **வையாபுரி** | |
| Evidence Recorded Time: 12.56 P.M. to 01.40 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

எனது குடியிருப்பு விலாசம் அழகாபுரத்தான்கொட்டாய், சூரப்பள்ளி கிராமம், ஜலகண்டாபுரம், மேட்டூர் வட்டம் ஆகும். என்னுடைய நிரூபண பிரமாண பத்திரத்தில் மேற்படி விலாசத்தை தான் கொடுத்துள்ளேன். நான் மேற்படி விலாசத்தில் கடந்த 38 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். என்னுடைய அனைத்து ஆவணங்களும் மேற்படி விலாசத்தில்தான் உள்ளது. நான் முதன் முதலாக மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் எப்போது சேர்ந்தேன் என்றால் 1984-ம் ஆண்டு சேர்ந்தேன். அப்போது எனக்கு 20 வயதாகும். நிரூபண பிரமாண பத்திரத்தில் என்னுடைய வயது என்ன குறிப்பிட்டுள்ளேன் என்று நினைவில்லை. 1984-ற்கு முன்பு மேற்படி கட்சியில் சேலம் மாவட்ட குழுவில் என்னென்ன நிகழ்வுகள் நடைபெற்றது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்கள் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அது வீரக்கல் புதுார் கிராமம், சர்வே எண்.216/12 ற்கு சம்மந்தப்பட்டது ஆகும். அது நான்கு செண்ட் விஸ்தீரணம் கொண்டது. வழக்கு சொத்தின் நீள அகலம் தெரியுமா என்றால் 1995-ல் கட்டப்பட்ட பகுதி கிழமேல் 22 அடி தென்வடல் 32 அடி ஆகும். நான்கு செண்ட் நிலத்திலும் கட்டுமானப்பகுதி உள்ளது. அதே கிழமேல் 22 அடி தென்வடல் 32 அடி நீளமுள்ள மற்றொரு கட்டிடம் 1995-ல் கட்டப்பட்டது. அது கட்டப்பட்டபோது கட்சி அலுவலகம் ஆகும். அதன் வரைபடத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி அனுமதிக்கப்பட்ட வரைபடத்தை வழக்கில் ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் என் மூலமாக தாக்கல் செய்யப்படவில்லை. DW1 மூலமாக வரைபடம் குறியீடு செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. 1997-ல் அங்கீரகப்பட்ட வரைபடத்தை பார்த்தேன். மேற்படி வரைபடம் எந்த தேதியில் அங்கீரம் வழங்கப்பட்டது என்றால் நினைவில்லை. மேற்படி வரைபடம் யார் பெயரில் இருந்தது என்றால் கட்சியின் செயலாளர் எம்.ராஜாகோபாலன் என்பவர் பெயரில் இருந்தது. அந்த ராஜாகோபாலன் இந்த வாதி என்றால் சரிதான். அங்கீரகப்பட்ட வரைபடத்தில் கட்சிக்காக செயலாளர் ராஜாகோபாலன் என்று உள்ளதா என்றால் அப்படிதான் இருந்தது. நான் வரைபடத்தில் பார்த்தாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது மேற்படி கட்சியில் மாவட்ட செயலாளராக உள்ளேன். எனக்கு வரும் அஞ்சல்களில்

மே.வை.சண்முகராஜா, மாவட்ட செயலாளர் என்றுதான் வரும் என்றால் சரிதான். கட்சியின் பெயர் போட்டு வருவதால் அது கட்சியின் சொத்து ஆகாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து மூழுவதும் ஆதியில் புறம்போக்கு நிலம் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் ராஜகோபால் புறம்போக்கு நிலத்தின் ஒரு பகுதியில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. எந்த இடத்தில் 1974–ல் ராஜாகோபாலன் குடியிருந்தார் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. 1974–ல் கட்சி அலுவலகத்தின் விலாசம் என்னவென்றால் செங்கொடி நகர், புதுசாம்பள்ளி, மேட்டுர் மெயின் ரோடு, வீரக்கல் புதுார் என்பதுதான் விலாசம் ஆகும். மேற்படி விலாசம் தொடர்பாக தாக்கல் செய்த ஆவணங்களில் மேற்படி விலாசம் உள்ளதா என்றால் இல்லை. 1974–ல் வாதி அந்த இடத்தை அனுபவித்து வந்ததன் பேரில் அவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 1974–ல் கட்சியின் பெயரில் அல்லது கட்சிக்காக இன்னார் பெயரில் என்று பட்டா வழங்கப்பட்டதா என்றால் 1974–ல் வழங்கப்படவில்லை, 1984–ல் வழங்கப்பட்டது. 1974–ல் ராஜாகோபால் ஆக்கிரமித்த பகுதிக்கு எவ்வளவு நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் இரண்ட செண்ட் நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டது. குணசேகரனுக்கும் இரண்டு செண்ட் நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டது. ராஜகோபாலன் பட்டா பெற்ற சமயத்தில் மொத்தம் 24 பேருக்கு பட்டா வழங்கப்பட்டது. மேற்படி 24 நபர்கள் யார் யார் என்றால் பெரும்பாலனவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர்கள் ஆவார்கள். மற்ற கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் நாங்கள் எங்கள் கட்சி அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலம் என்று உரிமை கொண்டாடவில்லை என்றால் சரிதான். கட்சி அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்று உரிமை கோருகிறோம். வாதி ராஜகோபால் கட்சி பெயருக்கு நிலத்தை எழுதிக்கொடுத்தாரா என்றால் கட்சியின் முழு நேர ஊழியர் என்ற பெயரில் வாதியின் பெயரில் பட்டா வாங்கப்பட்டது. அவ்வாறு எந்த ஒரு ஆவணமும் இல்லை என்றால் சரிதான். கட்சிக்காக அரசாங்கம் நிலத்தை ஒதுக்கவில்லை என்றாலும் சரிதான். என் பெயரில் சொத்து இருக்கும் போது அது கட்சியின் சொத்தா அல்லது என் சுய சொத்தா என்றால் எனது முயற்சியில் வாங்கியிருந்தால் அது எனது சொத்தாகும், கட்சியின் முயற்சியில் வாங்கியிருந்தால் அது கட்சி சொத்தாகும். அதுபோல கட்சியின் முயற்சியால் ராஜகோபால் பெயரில் வாங்கியதாக ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. குணசேகரன் பெயரில் பட்டா வழங்கப்பட்ட சொத்து கட்சி முயற்சியால் வாங்கப்பட்ட சொத்தா அல்லது குணசேகரன் முயற்சியால் வாங்கப்பட்ட சொத்தா என்றால் அது குணசேகரன் முயற்சியால் வாங்கப்பட்ட சொத்தாகும்.தங்கவேல் 1974 முதல் 1988 வரை கட்சியின் முழு நேர ஊழியர் ஆவார், அவர் விருதாசம்பட்டி, பழங்கோட்டையை சேர்ந்தவர் ஆவார். மேற்படி தங்கவேல் பெயரில் இரண்டு செண்ட் நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டது. HSD பட்டா குணசேகரன், ராஜகோபால், தங்கவேல் பெயர்களில் உள்ள பட்டாவை பார்த்துள்ளேனா

என்றால் பார்க்கவில்லை. ஆனால் தங்கவேல் பெயரில் இருந்த நிலத்தை கட்சிக்காக ஒரே நபரின் பெயரில் பட்டா இருக்கவேண்டும் என்று ராஜகோபால் பெயரில் வாங்கப்பட்டது. அது சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். குறிப்பாக என்ன ஆவணம் என்று சொல்லமுடியுமா என்றால் அது கட்சியில் எழுதப்பட்ட மினிட்ஸ் ஆகும். அது என்ன தேதியில் எந்த வருடத்தில் எழுதப்பட்டது என்றால் தேதி நினைவில்லை, 1987 அல்லது 1988–ம் ஆண்டாக இருக்கலாம். 1981–ம் ஆண்டு வாக்கில் புறம்போக்கு நிலத்திற்கு ஒவ்வொருவருக்கும் எவ்வளவு சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் ஒவ்வொரு நபருக்கும் இரண்டு செண்ட் வீதம் பட்டா வழங்கப்பட்டது. அந்த நிலங்களில் ராஜகோபாலுக்கு கொடுக்கட்ட நிலத்தில் அவரும், குணசேகரனுக்கு கொடுக்கப்பட்ட இடத்தில் அவரும், தங்கவேலுக்கு கொடுக்கப்பட்ட நிலத்தில் அவரும் அனுபவித்து வந்தார்கள் என்றால் தவறு. கட்சி பெயரில்தான் வழங்கப்பட்டது. 1974 முதல் 1981 வரை தங்கவேலு என்ன வேலை செய்தார் என்றால் அவர் கட்சியின் முழு நேர ஊழியர் என்பதால் அவருக்கு மாதம் ரூ.30/– அலவன்ஸ் கொடுக்கப்பட்டது. அவர் வேறு என்ன தொழில் செய்தார் என்றால் தெரியாது. ஒரு குடும்பத்தை நடத்த ரூ.30/– பத்தாது என்றால் சரிதான். தங்கவேலுவிற்கு குடும்பம் உள்ள விவரம் எனக்கு தெரியும். வேறு ஏதாவது வருமானம் வழி இருந்தால்தான் குடும்ப நடத்த முடியும் என்றால் சரிதான். தங்கவேலுவின் சொத்தும் ராஜகோபாலின் சொத்தும் அடுத்தடுத்து இருந்ததா என்றால் இருந்தது. அது கட்சி சொத்தாகும். கட்சி சொத்து என்பதற்கு தற்போது வரை மினிட்ஸை தவிர வேறு சட்டப்படியான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ராஜகோபால் எழுதிக்கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் எங்களால் உருவாக்கப்பட்டு வாதி பெயரில் இருந்த காழ்புணர்ச்சி காரணமாக உருவாக்கப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. தங்கவேல் பெயரில் உள்ள HSD பட்டா வை பார்த்துள்ளேன். அது யாரால் எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் தெரியாது. HSD பட்டா எண் தெரியுமா என்றால் பட்டா எண்.834 ஆகும். சாட்சி மீண்டும் பட்டா எண்.684 என்று கூறுகிறார். அதற்கு சைட் எண் தெரியுமா என்றால் அதன் சைட் எண்.34 ஆகும். மேற்படி HSD பட்டா நிபந்தனைக்குட்பட்டு கொடுக்கப்படும் பட்டா என்றால் சரிதான். தங்கவேலுவிற்கு கொடுக்கப்பட்ட பட்டா எண்.355/91(B3) ஆகும். சொத்தே எது என்று தெரியாமல் சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. HSD பட்டா விற்கான நிபந்தனைகளில் யார் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டதோ, அவர் அந்த சொத்தை 10 ஆண்டுகள் அனுபவித்து வரவேண்டும் என்றும் அது விற்பனை செய்ய கூடாது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். தங்கவேல் தன்னுடைய பெயரிலிருந்த சொத்தை எந்த தேதியில் விற்பனை செய்தார் என்றால் தெரியாது. தங்கவேல் தன்னுடைய பட்டா சொத்தை ராஜகோபாலுவிடம் உரிய மறுபயன் பெற்றுக்கொண்டு நிபந்தனை

காலத்திற்கு பின் விற்பனை செய்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியும், ஆனால் அது பொய்யாகும். அதனை பொறுத்து வாதி இரண்டு சொத்துக்களை பொறுத்து ஒரே பட்டாவாக ராஜகோபால் பெயருக்கு பட்டா வழங்கவேண்டும் என்று தங்கவேல் ஒரு மனுவினை வழங்கியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். அதன் அடிப்படையில் சைட் எண்கள் 33 மற்றும் 34 ஆகியவற்றை சேர்த்து 1992–ல் நத்தம் சர்வே துறை மூலமாக வாதி பெயருக்கு ஒரே பட்டாவாக வழங்கப்பட்டது என்றால் சைட் எண்கள் 34, 35ற்கு தான் வாதி பெயரில் ஒரே பட்டாவாக வழங்கப்பட்டது நினைவுள்ளது. அவ்வாறு வாதி பெயருக்கு வழங்கப்பட்ட நத்தம் பட்டாவின் எண் தெரியுமா என்றால் அந்த எண்தான் 684 ஆகும். சர்வே எண் தெரியுமா என்றால் 216/12 ஆகும், அதன் விஸ்தீரணம் நினைவில்லை. 1992–லிருந்து சொத்துக்கள் முழுவதும் வாதியின் பூரண சொத்தாக யாருடைய தலையீடும் இன்றி இருந்தது என்றால் சரியல்ல, அது பொய்யாகும். வழக்கின் பிரதிவாதிகளுக்கோ, அவருடைய ஆட்களுக்கோ, மூன்றாம் நபர்களுக்கோ எந்தவிதமான உரிமை மூலமும், சுவாதீன அனுபவமும், தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல, அது முற்றிலும் பொய்யாகும். 1972–ல் இருந்து வாதி கம்யூனிஸ் கட்சியில் இருந்தார் என்றால் சரிதான். அப்போது வாதி மால்கோ நிறுவனத்தில் வேலையில் இருந்தார் என்றால் சரிதான். கட்சியின் தொழில் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு தொழிலாளர்களின் நலனுக்காக போராடிய போது அவரை மால்கோ நிர்வாகம் பணி நீக்கம் செய்தது என்றால் சரிதான். 1972–ல் இருந்து அவரை கட்சியில் இணைத்துக்கொண்டு புதுசாம்பள்ளியின் கிளை செயலாளராகவும் அதன் பிறகு படிப்படியாக பல பொறுப்புகளை ஏற்று மாவட்ட செயலாளர், மாநிலக்குழுவில் பொறுப்பாளராகவும் இருந்தார் என்றால் சரிதான்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒம்/–DW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.